

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் க.செந்தில்குமார் தலைமையில் கும்பகோணத்தில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மாநில பிரச்சாரக்குழு செயலாளர் சேலம் பெ.சுஜாதா, தலைமைக் கழகப் பேச்சாளர் நாமக்கல் ராஜகோபால் ஆகியோர் சிறப்புரையாற்றினர். பொதுக்கூட்டத்தில் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்ட துணைச் செயலாளர் கோவி.அய்யாராசு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி மற்றும் ஒன்றியக் கழகச் செயலாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், பேரூர்க் கழகச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாணவர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் முனைவர் ரா.ராஜேஷ், எஸ்.சூர்யா, செள.தேவராஜன், ப.இலக்கியா உள்ளிட்ட கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.

# தஞ்சை வடக்கு மாவட்டத்தில் வாக்காளர் சரிபார்த்தல் பணி!

## மாவட்டக் கழகச் செயலாளர் சு .கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!

தஞ்சாவூர், ஜன. 30 -

தஞ்சை வடக்கு மாவட்டத்தில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளான மார்ச்1 அன்று தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் நம் கழகத்தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் இந்தியா மட்டுமல்லாது, வெளிநாட்டிற்கும் சென்று அல்லும், பகலும் அயராது சுற்றுப்பயணம் செய்து மக்கள் பணியாற்றி வருகிறார். மக்கள் நலன் ஒன்றே தன்னுடைய வாழ்நாள் இலட்சியம் என்று அரும்பாட்டு பட்டு வரும் கழகத் தலைவரின் பிறந்தநாளான மார்ச் 1. இளைஞர்களின் எழுச்சி நாளாக வருடா, வருடம் மார்ச் மாதம் முழுவதும் சிறப்பாக கொண்டாடிவருகிறோம்.

அதேபோல் இந்த வருடமும் தஞ்சை வடக்கு மாவட்டம் முழுமைக்கும் உள்ள மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் வார்டுகள், ஊராட்சிகள், ஊராட்சி கிளைகளில் சுவர் விளம்பரம் செய்வதுடன், அப்பகுதிகளிலுள்ள கழக கொடிகம்பங்களுக்கு கருப்பு - சிகப்பு வர்ணம் பூசி, கழக கொடியேற்றும் நிகழ்ச்சிகளை நடத்தி, ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிடவும், மாணவ செல்வங்களுக்கு, நோட்டு புத்தகங்கள், பேனா போன்ற உபகரணங்களை வழங்கி, அனைவருக்கும் இனிப்புகள் வழங்கியும், அன்றைய தினத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மேடை பேச்சுகளையும், கழகத் தலைவர் தளபதி அவர்களின் மேடை பேச்சுகளையும், கழக பாடல்களையும் ஒலி பரப்பி கழகத்தலைவரின் பிறந்தநாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடவும்.

மேலும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் அன்று மாவட்ட இளைஞர் அணி மற்றும் மாணவர் அணி சார்பில் ஆண்டுதோறும் மாபெரும் இரத்ததான முகாம் நடைபெறுவதை போல், மற்ற மாவட்ட சார்பு அணிகளும் தினம் ஒரு அணி என்ற வீதத்தில் முதியோர் இல்லம், ஆதரவற்ற குழந்தைகள் இல்லம், கருணை இல்லங்களில் உணவு மற்றும் அவர்களுக்கு தேவையான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கிடவும் அதே போன்று ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் சார்பிலும் மேற்கண்ட இடங்களில் மார்ச் மாதம் முழுவதும் நலத்திட்ட உதவிகளை செய்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை வெகுச்சிறப்பாக கொண்டாட வேண்டும். மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழகங்கள் மற்றும் சார்பு அணியினர் தாங்கள் நடத்தும் நிகழ்ச்சிக்கான தேதிகளை மாவட்டக் கழகத்தில் தெரிவிக்க வேண்டும்.

வருகின்ற நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுருத்தலின்படி மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட "நிர்வாகிகள் சந்திப்பு" கூட்டம் 01.02.2024 காலை 09.00 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் குறித்த நேரத்திற்கு முன்பாகவே நமது தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாநகராட்சி துணை மேயர், மண்டலக்குழு தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், ஒன்றியக்குழு தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

03.02.2023 அன்று தமிழ் இனத்திற்கு பெருமை சேர்த்திடும் வகையில் மெட்ராஸ் மாகாணம் என்பதை மாற்றி தமிழ்நாடு என்ற பெயரை பெற்று தந்து, கடமை - கண்ணியம் கட்டுபாடுகளை வகுத்த பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு கிளை கழகங்கள் தோறும் பேராறிஞர் அண்ணா அவர்கள் திருவுருவப்ப டத்திற்கு மலரஞ்சலி செலுத்துவது என்றும் மற்றும் பேரறிஞர் அண்ணா சிலைக்கு அமைதி ஊர்வலமாக சென்று மலர் மாலை அணிவித்து பெருமை சேர்க்க வேண்டுகிறேன்.

மேலும் வரையறுக்கப்பட இறுதி வாக்காளர் பட்டியல் அந்தந்த மாநகர, ஒன்றிய, பேரூர் கழகங்கள் மூலம் கிளைக்கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதனை பி.எல்.ஏ2 மற்றும் கிளைச் செயலாளர்கள் சரிபார்த்து தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஓ.எம்.ஆர். தாள் மற்றும் பி.எல்.சி கையேடுகளை, பி.எல்.சி மற்றும் பி.எல்.ஏ2 மற்றும் கிளை மற்றும் வார்டு செயலாளர்கள் இணைந்து பணியாற்றி மாவட்டக் கழகத்திடம் மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் மூலம் ஒப்படைக்கவும்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

# குமாரபாளையத்தில் மொழிப்போர்த் தியாகிகள் நினைவிடத்தில் அஞ்சலி!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் மரியாதை!

நாமக்கல், ஜன. 30 -

தமிழகத்தில் லால்பகதூர் சாஸ்திரி தலைமையிலான ஒன்றிய அரசின் கட்டாய இந்தித் திணிப்பை கண்டித்து 1965 ஆம் ஆண்டு மாணவர்களும், பல்வேறு கட்சியினரும் இந்தித் திணிப்பைக் கண்டித்து கடும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்பொழுது தமிழகத்தில் பக்தவச்சலம் தலைமையிலான அரசு, போராட்டக்காரர்கள் மீது காவல் துறையை ஏவி துப்பாக்கி சூடு நடத்தியது. இதில் மாணவர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் என ஏராளமானோர் உயிர் இழந்தனர்.

இந்த போராட்டத்தின் போது, நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் நடைபெற்ற இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தின் போது 15 வயது மாணவன் போலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனைக் கண்ட பொதுமக்களும், போராட்டக்காரர்களும் காவல்துறையினரை தாக்கியதுடன், அவர்கள் வந்த வாகனத்தையும் தீயிட்டுக் கொளுத்தினர். போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் ஆர்வலர்கள் 15 பேர் காவல்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்நாளையொட்டி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25 ஆம் தேதி மொழிப்போர் தியாகிகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழகத்தில் மொழிப்போர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் அதிகமாக போலீசார் துப்பாக்கி சூட்டில் கொலை செய்யப்பட்ட பகுதி நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் என்பதால் அதனை நினைவில் கொள்ளும் வகையில் குமார பாளையம் தேசிய நெடுஞ்சாலை பகுதியில் பொதுநல அமைப்புகளால் ஏற்படுத்தப்பட்ட மொழிப்போர் தியாகிகள் நினைவுத் தூணிற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினார்.

திமுக மாவட்ட கலை இலக்கிய அணியின் துணைத் தலைவர் மதுரை ராமநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் தொழில்அதிபர் மு. ராஜாராம், விஜய்கண்ணன், ஞானசேகரன், மற்றும் மூத்த வழக்கறிஞர் ப.பா. மோகன், துரைசாமி மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் நகர்மன்ற உறுப்பினர்கள், சார்பு அணியினர், தந்தை பெரியார் திராவிட கழகத்தினர், திராவிடர் கழகத்தினர், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.



சேலம் மாநகரம் 29வது கோட்டத்திற்கு உட்பட்ட சின்ன முத்து தெரு, தேவாங்கர் பிள்ளையார் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் இரா.இராஜேந்திரன், மேயர். ஆ.ராமச்சந்திரன் ஆகியோர் வீதி, வீதியாகச் சென்று மக்களின் கோரிக்கைகளை கேட்டு மனுக்கள் பெற்றனர். உடன் கோட்டச்செயலாளர் கே.என்.சிவக்குமார், பாலாஜி, பழனி ஆகியோர் உள்ளனர்.



நாகை மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் தி.மு.க. பொதுக்கூட்டம் நாகை அவுரி திடலில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்ட கழகச் செயலாளர் எம்.கௌதமன் பேசினார். உடன் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் கந்திலி கரிகாலன், குடியாத்தம் புவியரசி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க. ராஜேந்திரன், இலமேகநாதன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், நகரக் கழக செயலாளர் இரா மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ப.உதயகுமார் மற்றும் பலர் உள்ளனர்.

### அறுபடை வீடு ஆன்மிகப் பயணம்:

# 207 மூத்த குடிமக்கள் முதற்கட்டப் பயணம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன. 30 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (28.01.2024) சென்னை, கந்தகோட்டம் முத்துக்குமார சாமி திருகோயிலில் அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் முதற்கட்ட பயணத்தில் பங்கேற்கும் 207 மூத்த குடிமக்களுக்கு பயணவழிப் பைகளை வழங்கி, ஆன்மிகப் பயணப் பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ் கடவுள் என்று போற்றப்படுகின்ற முருகப்பெருமான் திருக்கோயில்களில் குறித்த காலத்தில் திருப்பணிகளை மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல் போன்ற பல்வேறு சிறப்பான பணிகளை இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் இல்லாத அளவிற்கு நடத்தி வருகிறது.

அதேபோன்று இராமேஸ்வரம் காசி ஆன்மிகப் பயணத்தில் கடந்த ஆண்டு 200 பக்தர்கள் அழைத்து செல்லப்பட்டனர். இந்த ஆண்டு 300 பக்தர்கள் அழைத்துச் செல்லப்பட உள்ள நிலையில் அதன் முதற்கட்ட பயணம் ஜனவரி 31ஆம் தேதி தொடங்கப்பட உள்ளது. இதற்காக அரசு ரூ.75 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

முருகப்பெருமான் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்சோலை ஆகியவற்றை ஒரேமுறையாக சென்று தரிசனம் செய்திடும் வகையில் அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் முதற்கட்ட பயணத்தில் 207 மூத்த குடிமக்கள் இன்றைய தினம் புறப்படு கின்றனர்.

இந்த ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்கும் மூத்த குடிமக்களுக்கு போர்வை, சால்வை, துண்டு, பெட்சீட், குளியல் சோப், டூத் பிரஷ், பேஸ்ட், முகம் பார்க்கும் கண்ணாடி, தேங்காய் எண்ணெய், சீப்பு போன்ற பொருட்கள் அடங்கிய பயணவழிப்பைகளை வழங்கியுள்ளோம். இந்த 6 ஆன்மிகப் பயண பேருந்துகளில் மூத்த குடிமக்களுடன் அவர் களுக்கு உதவியாக செயல் அலுவலர்கள், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் மருத்துவ குழுவினரும் உடன் செல்கின்றனர்.

அறுபடை வீடுகளுக்கும் ஒரே முறையில் தனிப்பட்ட ஒருவர் சென்று வருவது சற்று கடினமானதாக இருப்பதோடு, அதற்கான செலவினம் ரூ.50 ஆயிரம் வரை ஆகும். ஆனால் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் ஏற்பாடு செய்யப்படும் அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்திற்கு ஒரு நபருக்கு ரூ.15,830 செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி 1000 மூத்த குடிமக்களை அழைத்துச் சென்று வர ஆகும் செலவினம் ரூ.1,58,30,000/ ஆகும். இந்த தொகையானது திருக்கோயிலின் நிதியிலிருந்து செலவிடப்படவில்லை. இதன் முழு செலவினத் தொகையினை அரசு மானியமாக வழங்கி முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இந்த ஆன்மிகப் பயணம் மகிழ்ச்சியாகவும், வெற்றிகரமாகவும் அமைந்திட வாழ்த்துகளை தெரிவித்து, இறைவனை பிராத்திக்கின்றோம்.

அறுபடை வீடு ஆன்மிகப் பயணம் என்பது மிகச் சிறப்பான புதிய திட்டம் என்பதால் பக்தர்களிடையே மிகப்பெரிய வரவேற்பு இருக்கின்றது. குறைந்த காலகட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றில் தகுதி உடையவர்கள் தேர்வு செய்து இன்று அனுப்பி உள்ளோம். எப்போதுமே ஆதீனங்கள், மடாதிபதிகள் நல்லவை நடக்கின்ற திசை நோக்கி தான் செல்வார்கள். இது ஆன்மீகத்திற்கு உகந்த செயல் என்பதால் நாங்கள் அழைக்கின்ற நேரத்தில் இது போன்ற நிகழ்ச்சிகளுக்கு, முதலமைச்சர் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையின்பால் வருகை தந்து சிறப்பிக்கின்றனர். அறுபடை வீடு ஆன்மிகப் பயணமானது ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு படை வீட்டிலிருந்து தொடங்கப்படும். இந்த ஆண்டு இறுதிக்குள் 1000 மூத்த குடி மக்களை அறுபடை வீட்டிற்கு அழைத்துச் சென்று சிறப்பான தரிசனத்தை ஏற்படுத்தி தரு வோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ. முரளீதரன், கூடுதல் ஆணையர் திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் ச.இலட்சுமணன், பொ.ஜெயராமன், திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி ஜ.முல்லை, உதவி ஆணையர்கள் அரவிந்தன், செல்வராஜ் மற்றும் செயல் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### திண்டிவனத்தில் புதுமைப்பெண் திட்டத்தில் பயன் அடையும்

# கல்லூரி மாணவிகளுக்கு முதல்வரின் வாழ்த்துச் செய்தி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

திண்டிவனம் ஜன 25-

உயர்கல்வியில் படிக்கும் மாணவிகள் அரசின் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி நன்கு படித்து சாதனையாளராக விளங்க வேண்டும் என புதுமைப் பெண் திட்டத்தில் பயன் அடையும் கல்லூரி மாணவிகளுக்கு முதல மைச்சரின் வாழ்த்துச் செய்தி மடலை வழங்கி அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசும்போது குறிப்பிட்டார்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் ஆ. கோவிந்தசாமி அரசு கலைக்கல்லூரியில் புதுமைப்பெண் திட்டத்தில் பயனடையும் கல்லூரி மாணவிகளுக்கு முதலமைச்சரின் வாத்து செய்தி மடல் வழங்கும் நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புதுமைப்பெண் திட்டத்தில் பயனடையும் கல்லூரி மாணவிகளுக்கு முதலமைச்சரின் வாழ்த்து செய்தி மடலை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்,

முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சியில் பெண்கள் கல்வி பயிலவேண்டும் என்ற நோக்கில் பெண்களுக்கு இலவச கல்வி திட்டத்தினை அறிவித்ததோடு தொடர்ந்து படித்திட வேண்டும் என்பதற்காக உதவித்தொகை மற்றும் திருமண உதவித் தொகை திட்டத்தை கொண்டு வந்தார். அவர் வழியில் ஆட்சி செய்து வரும் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் ஆண்களுக்கு நிகராக பெண்கள் அனைத்துத்துறைகளிலும் சிறந்து விளங்கிட வேண்டும். தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்திட வேண்டும் என்ற நோக்கில் புதுமைப் பெண் திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் 73 கல்லூரிகளில் 3233 மாணவிகள் புதுமைப்பெண் திட்டத்தில் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை பெற்று வருவதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான்,

உயர் கல்வியில் படிக்கும் மாணவ - மாணவிகள் அரசின் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி நன்கு படித்து சாதனையாளர்களாக விளங்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ந்து தேசிய பெண் குழந்தைகள் தினம் மற்றும் தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் மாணவ மாணவிகள் மற்றும் அலுவலர்கள் விழிப்புணர்வு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

நிகழ்ச்சியில் மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்சிவக்குமார். திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷு நிகம், ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், மாவட்ட சமூக நலத் துறை அலுவலர் ராஜம்மாள், கல்லூரி முதல்வர் நாராயணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம், மோகனூர் சாலை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் குடியரசு தின விழாவை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயின்று வரும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி, அவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் பொன்னாடை அணிவித்து, இனிப்புகள் வழங்கி குடியரசு தின விழா வாழ்த்துகளை தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் மருத்துவர் எம்.செல்வராஜ், மாணவர் சங்க துணைத்தலைவர் மருத்துவர் பாலசுப்ரமணியன் ஆகியோர் உட்பட கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.